


# நகர் ஊரமைப்பு துறை - விருதுநகர் மாவட்டம்
## ஆலங்குளம் ஊராட்சி

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம் / ஊராட்சி ஒன்றியம், ஆலங்குளம் ஊராட்சி, ஆலங்குளம் கிராமம், ச.எண்.1051/1,1051/2,1051/3-இல் அமையும் உத்தேச மனைப்பிரிவிற்கான சாலை அமைப்பு ஒப்புதல் வரைபடம்.

(திட்டமில்லா பகுதி)

இணையதல விண்ணப்ப எண் : 8VWG58HN
அளவு : 1:400

வ

## குறிப்புகள்:

| | |
|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் மொத்தப் பரப்பளவு | - 8700.00 சமீ (2.14 ஏக்கர்) |
| மனைப்பிரிவு உத்தேச சாலைகளின் பரப்பளவு மூலை முடக்கு உட்பட | - 2367.06 சமீ |
| மீதமுள்ள இடத்தின் பரப்பளவு | - 6332.94 சமீ |
| மனைப்பிரிவு இடத்தின் எல்லை | - |
| நிலையிலுள்ள சாலை | - |
| மனைப்பிரிவு உத்தேச சாலை | - |
| மனுதாரர் சொந்த உபயோக பகுதி | - 138.00 சமீ |
| கோரிய மனைகளின் எண்ணிக்கை | - 40 எண்ணம் |
| ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை | - 35 எண்ணம் |

## பொது ஒதுக்கீடு:

(உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது)

1.(நகர் ஊரமைப்பு இயக்குனர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:4367/2019 நாள் 05.02.2020 மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட-2019 விதிகள் -2019 விதி எண் 41(1) மற்றும் 47(6) ன்படி 10 சதவீதம் பூங்கா பரப்பளவிற்கு இனையான கட்டண தொகையினை வழிகாட்டு அரசு மதிப்பின்படி உரிய கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. பூங்கா உபயோகத்திற்கான பரப்பு - 633.29ச.மீ (10.00 %)

2.உள்ளாட்சிக்காக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது (PUBLIC PURPOSE) பரப்பு - 52ச.மீ ( 82 %)

3. TANGEDCO விற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது பரப்பு - 48.28ச.மீ ( 76% )

## கட்டிட வரம்பு:

9.00மீ அகலத்திற்கு கீழ் உள்ள சாலைகளுக்கு 1.5மீ விடப்பட வேண்டும்.

9.00மீ அகலத்திற்கு மேல் 18.00மீ அகலம் வரை உள்ள சாலைகளுக்கு 3மீ விடப்பட வேண்டும்.

## மூலை முடக்கு

12.00மீ அகலத்திற்கு கீழ் உள்ள சாலைகளுக்கு 1.5மீ x 1.5மீ விடப்பட வேண்டும்.

## நிபந்தனைகள்:

1.அரசாணை எண்:18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை ( MA-1 )நாள்:04.02.2019-ன் படி உள்ள நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.

2.அரசாணை எண்:16, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை ( MA-1 )நாள்:31.01.2020-ன் படி உள்ள நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.

3.இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சியில் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

4.நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என்று அறியபட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்ப்படககூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், அவர்களால் ரத்து செய்யப்படும்.

5.விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

6.நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில் நுட்ப ஆவணங்களில்(கிரையப் பத்திரம் - குத்தகை பத்திரம் - பட்டா -தானப்பத்திரம்-பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப் பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் மூலம் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

7.நீர் நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.

8.ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x 4'-அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

9.நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல.

10.குறைந்த அழுத்த மின்கம்பி பாதையினை உத்தேச சாலையின் போக்கிற்கு ஏற்ப தனது சொந்த செலவில் மனுதாரர் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

11.மனுதாரர் பகுதி-1 ல் அமையும் கிணற்றினை சுற்றிலும் 1.83மீ உயர அளவில் பொது மக்களின் நலன் கருதி சுற்றுச்சுவர் அமைக்கப்பட வேண்டும். இதனை உள்ளாட்சியால் உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

## குறிப்பு :

அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ம.வ ந.ஊ.து.இ. (விருமா) எண் : 169/ 2024

அளவர் /உதவிவரைவாளர் | வரைவாளர் நிலை-3 | மேற்பார்வையாளர் | உதவி இயக்குநர்

துணை இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
விருதுநகர் மாவட்டம்

Signature Not Verified